# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தம்)

**2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் 2019, ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2019, ஓகத்து மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ **305 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ***சட்டப்பயன்பற்றிய கூற்று***

***வாசகம் 2 :*** *இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் 24 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது குத்தகை எடுத்தவரின் சம்மதம் இன்றி ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட தாபனத்திற்கான குத்தகையின்கீழ் அவரது உரிமைகளை கைமாற்றுவதற்கு அல்லது குறித்தளிப்பதற்கு குத்தகை கொடுத்தவர் ஒருவரை இயலச்செய்கின்ற ஏற்பாடுகளை செய்வதற்குமாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் குத்தகை கொடுத்தவரின் உரிமைகள் குத்தகை எடுத்தவரின் வங்கிமுறிவிலான நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவருக்கு எதிராக அல்லது குத்தகை எடுத்தவரின் கடன்தருநர் ஒருவருக்கு எதிராக வலுவுறுத்தப்பட வேண்டியிருக்கின்றதாயின் 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ் குத்தகைகொடுத்தவரின் உரிமைகளை செல்லுபடியாகும் முறையில் பூர்த்திசெய்திருப்பதனை தேவைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குமாகும்.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது சாதனத்தின் உடைமையை மீளப்பெறுவதற்கு 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ் ஏதேனும் நிதிக் குத்தகையின்கீழ் உரிமைகளைப் பதிவு செய்துகொண்டுள்ளவரான குத்தகை கொடுத்தவர் ஒருவரின் உரிமையை ஏற்றங்கீகரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குமாகும்.*

**நிதி குத்தகைக்கு விடுதல்**
**(திருத்தம்)**

ச.வ.- ஓ. 66/2017

### 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''குத்தகை கொடுத்தவர், நிதிக் குத்தகை செய்துகொள்ளப்படும் நேரத்தில் அல்லது அதன் பின்னர் பெறப்படும் குத்தகை எடுத்தவரின் எழுத்திலான சம்மதத்துடன், நிதி குத்தகையின்கீழ் அல்லது குத்தகையின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் உபகரணம் தொடர்பாக அல்லது இவை இரண்டினதும், குத்தகை கொடுத்தவருக்குள்ள உரிமைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட தாபனத்துக்கு அல்லது விசேட நோக்க அமைப்புக்கு கைமாற்றலாம் அல்லது சாட்டுதல் செய்யலாம்:'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''குத்தகை கொடுத்தவர், நிதி குத்தகையின் கீழ் அல்லது குத்தகையின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் உபகரணம் தொடர்பாக அல்லது இவை இரண்டினதும், குத்தகை கொடுத்தவருக்குள்ள உரிமைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட தாபனத்துக்கு அல்லது விசேட நோக்க அமைப்புக்கு கைமாற்றலாம் அல்லது சாட்டுதல் செய்யலாம்:'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''எவரேனும் கடன்தருநருக்கு எதிராக வலுவுறுத்தப்படலாம்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''எவரேனும் கடன்தருநருக்கு எதிராக வலுவுறுத்தப்படலாம் ; ஆயின், குத்தகை கொடுத்த ஒருவர், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ் அவ்வுரிமைகளைச் செல்லுபடியான முறையில் நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு, ''இச்சட்டத்தின்கீழ் அல்லது நிதி குத்தகையொன்றின் ஏற்பாடொன்றின்கீழ்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ் அல்லது போட்டியிடுகின்ற உரிமைக்கோரிக்கையாளர்கள் எவரும் இல்லாதவிடத்து, நிதி குத்தகையொன்றின் ஏற்பாடொன்றின்கீழ்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.